# தொம்பே பிரதேச சபை
# கம்பஹா மாவட்டம்

## 1 நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2012 மார்ச் 28 ஆம் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2011 மார்ச் 14 ஆம் திகதியும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை 2013 சனவரி 11 ஆம் திகதி சபைத் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

#### முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது பரிசீலனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட சிறந்த தகவல்கள், விளக்கங்கள் என்பவற்றிற்கமையவும் தொம்பே பிரதேச சபை 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையான கணக்குப் பதிவேடுகளைப் பேணியுள்ளது என்றும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்படும் எனது அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த காரணிகளால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களைத் தவிர, 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தொம்பே பிரதேச சபையின் செயலாற்றுகை தொடர்பான நிலவரத்தையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அச்செயற்பாட்டு நடவடிக்கைகளின் நிதி விளைவுகளையும் காசுப்பாய்ச்சல் கூற்றையும் உண்மையாகவும், நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தும் விதத்தில் நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கடைத் தொகுதிகள் மற்றும் அலுவலகக் கட்டிடங்களின் கிரயமான ரூபா 65,553,774 தொகையும் ஆலோசனைக் கட்டணம் மற்றும் ஏனைய பொருத்திகளுக்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 1,415,184 தொகை மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) புதிய அலுவலகக் கட்டிடத்திற்கு தொலைபேசி முறைமையையும் மரத்தளபாடங்களையும் பெற்றுக்கொள்வதற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 1,950,101 தொகை மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) இரு சந்தர்ப்பங்களின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 2,282,514 தொகையான தளபாடங்களின் பெறுமதி வேறு உபகரணங்களின் கீழ் கணக்கிடப்பட்டிருந்தது.

(ஈ) 2007 ஆம் ஆண்டின் போது நன்கொடையாகப் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த ஆர்வீ 8822 ஆம் இலக்க உழவு இழுவை இயந்திரத்தின் பெறுமதி மதிப்பிடப்பட்டு மீளாய்வாண்டின் போது கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

(உ) ரூபா 19,205,071 தொகையான மீளச் செலுத்தப்பட வேண்டிய வைப்பு மீதியில் 08 கைத்தொழில்களுக்கு உரித்தான தீர்த்துவைக்கப்பட்ட வைப்புத் தொகையான ரூபா 3,038,490 உம் உள்ளடக்கப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டின் போது செயற்பட்ட 07 கிராம எழுச்சிச் செயற்திட்டங்களுக்காக தொம்பே பிரதேச செயலாளரிடம் இருந்து பெறவேண்டிய ரூபா 5,933,458 தொகை கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

(எ) மோட்டார் வாகனங்கள் மற்றும் வண்டிக் கணக்குகளில் ரூபா 1,128,324 தொகை குறைத்துக் கணக்கிடப்பட்டிருந்தது.

### 1.3.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள்

05 கணக்கு விடயங்களிற்குரிய கட்டுப்பாட்டுக் கணக்குகளின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 104,274,443 ஆக இருந்ததுடன், துணைப் பதிவேடுகளின் பிரகாரம் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 106,104,070 ஆக இருந்தது.

### 1.3.3 செலுத்த வேண்டிய கணக்குகள்

மீளாய்வாண்டின் ரூபா 60,349,090 தொகையான கடன்கொடுத்தோர் மீதியில் 01 ஆம் ஆண்டில் இருந்து 04 ஆண்டுகள் வரை பழமைவாய்ந்த ரூபா 24,026,840 தொகையான கடன்கொடுத்தோர் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.4 ஊழியர் கடன்

நீண்டகாலமாக அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 118,846 ஆகும்.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 22,020,900 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 29,053,903 ஆக இருந்தது.

### 2.2 உள்ளகக் கணக்காய்வு

நிறுவனத்தில் போதியளவு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) சொத்துக்களின் முகாமைத்துவம்

(இ) ஒப்பந்த நிருவாகம்

(ஈ) இருப்புக் கட்டுப்பாடு